RECEIVED 1979-7-24 PERIODICALS DIVISION UNIVERSITY ★ LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8946/78

மலர்: 21 ஆனி: 20 ஷஃபா: 8 இதழ்: 142
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-7-79

## பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க கூட்டணி முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைவிட்டு நேற்று மாலை வெளிநடப்பு செய்த தமிழர் விடுதலை கூட்டணி எம் பிக்கள்; தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

இதுபற்றி திரு அ அமிர்தலிங்கத்திடம் நேற்றிரவு 'ஈழநாடு' கேட்டபோது; கூட்டணியின் மத்திய கமிட்டி இதுபற்றி விரைவில்கூடி ஒருமுடிவெடுக்கும் என்றும். கூட்டணியின் பாராளுமன்றக்குழுவின் தீர்மானத்துக்கிணங்க, மத்திய கமிட்டியின் முடிவுவரும்வரை கூட்டணி எம் பிக்கள் பாராளுமன்றம் செல்லமாட்டார்கள் என்றும் கூறினர்.

கூட்டணியின் பாராளுமன்றக்குழு நேற்றுமாலை கூடிய போது பாராளுமன்றத்துக்கு இனிமேல் செல்வதில்லை என்றும் இதுபற்றிய இறுதியான முடிவை கூட்டணியின் மத்திய கமிட்டி தீர்மானிக்கும் என்றும் முடிவு எடுத்தது. [ம]

# தமிழர் கூட்டணி தடைசெய்யப்படலாம்

# ஜனாதிபதி எச்சரிக்கை!

## பயங்கரவாதத்தைத் தடுக்க விரைவில் புதிய சட்டங்கள்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கடுமையான கண்டனத்துக்குள்ளானது. இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகரும் எதிர்க் கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கத்தை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கடுமையாகக் கண்டித்து உரையாற்றினார்.

பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தாம் தடைவிதிக்கநேரிடலாமென்று எச்சரித்த ஜனாதிபதி, பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த விரைவில் கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படுமென்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று, ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன உரையாற்றுகையில் கூறியதாவது:

### புதிய சட்டம்வரும்

"நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர, கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இந்தியா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் அமுலில் இருக்கும் சில சட்டங்கள் போன்று, பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த சில சட்டங்கள் கொண்டுவரப்படும். இதுசம்பந்தமான மசோதாக்களை அதிவிரைவிலேயே அரசாங்கம் தாக்கல் செய்யவிருக்கிறது.

### நேசக்கரம் நீட்டினோம்

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசாங்கம் பலசந்தர்ப்பங்களில் நேசக்கரம் நீட்டியது. ஆனாலும், அரசின் நேசக்கரத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்காதது மிகவும் வருந்தத்தக்கது. இதற்குப் பதிலாக தமிழர் விடுதலை கூட்டணி, அரசாங்கத்தையே தொடர்ச்சியாகக் கண்டித்து வந்திருக்கிறது

"கூட்டணி எம் பி க்களை எந்த ஒரு கட்டத்திலும் அரசாங்கம் பாரபட்சமாக நடத்தவில்லை அரசாங்க எம் பிக்களைப் போன்றே கூட்டணி எம் பிக்களும் எவ்விதப்பாரபட்சமுமின்றி சலுகை வேறுபாடின்றி நடத்தப்பட்டனர் நியமன விஷயங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தேவைகள் போன்ற பல விஷயங்களிலும் பாரபட்சம் காட்டப்படவில்லை அரசாங்க எம் பிக்கள் அனுபவித்த அநேக சலுகைகளை கூட்டணி எம் பிக்களும் அனுபவித்தனர்

### அமிருக்கு அந்தஸ்து

"எதிர்க் கட்சித்தலைவர் திரு அமிர்தலிங்கத்தைப்பொறுத்த வரை, பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் எவருமே முன்னர் அனுபவித்திருக்கமுடியாத சலுகைகளை அரசாங்கம் திரு அமிர்தலிங்கத்துக்கு வழங்கியது அவரின் அந்தஸ்து மிகவும் கௌரவமாக இருந்ததே தவிர எந்தவகையிலும் குறைவாகக்காணப்படவில்லை ஆனால் திரு அமிர்தலிங்கம்; அரசாங்கத்தையும், இந்தநாட்டு சிங்கள மக்களையும் மிகவும் கடுமையாக எதிர்த்தும், பேசியும் வருகின்றார் திரு அமிர்தலிங்கத்துக்கு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒரு அமைச்சருக்கு அளிக்கப்படும் அந்தஸ்தையே அரசு வழங்கியிருந்தது. ஆனால் அவர் வெளிநாடு சென்றபோது, அரசாங்கத்தைக் கண்டித்து உரையாற்றியிருக்கின்றார் அந்த நாட்டு மக்களை இந்தநாட்டைப் பற்றி தவறாக அபிப்பிராயம் கொள்ளும் வகையில் அவரது உரைகள் இடம்பெற்றிருக்கின்

(6-ம் பக்கம் பார்க்க)

## லண்டன் 'டெலக்ஸ்'

(கொழும்பு)

கைத்தொழில் அமைச்சர் திரு சிறில் மத்யூவுக்கு லண்டனிலிருந்து கிடைக்கப்பெற்ற தந்தி ஒன்றை நேற்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் திரு பேர்ஸி சமரவீரா பாராளுமன்றத்தில் வாசித்துக் காட்டினார்.

"அமைச்சர் மத்யூவுக்கு லண்டனிலிருந்து ஒரு 'டெலக்ஸ்' வந்திருக்கிறது. தமிழீழத்துக்குச் சொந்தமான வவனியாவில் கைவைக்காதே'' என்று எழுதப்பட்டுள்ளது. இதனை இளம்புலிகள் அனுப்பியதாக தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது'' என்று பிரதி அமைச்சர் சபையில் கூறினர். [ம]

## இளைஞர் மீது தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிசார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த பொலிசாரும், யாழ் பொலிசாரும் இக்கொலைச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைசெய்துவருகின்றனர் வல்வெட்டித்துறைபகுதியில் பொலிசார் பல இடங்களில் சோதனைசெய்தபோதும் சந்தேகநபர் எவரும் கைதாகவில்லை இக்கொலை தொடர்பாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்களையும் சந்தேகத்தின் பேரில் பொலிசார் தேடிவருகின்றனர்.

இவ்விரு இளைஞர்கள் கைதானதும் இக்கொலைபற்றி மேலும் பல தகவல்கள் வெளியாகலாம் என பொலிஸ் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (கொ)

## புதுச்சேரி சட்டசபை தேர்தல்: ஆகஸ்ட் 17

(புதுடில்லி)

புதுச்சேரி சட்டசபைத் தேர்தல், அடுத்த மாதம் பதினேழாம் திகதி நடைபெறுமென்று தலைமைத் தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டசபை கடந்தவருடம் நவம்பர் மாதம் முதல் ராஷ்டிரபதி ஆட்சியின்கீழ் இருந்து வருகிறது.

மகத்தான குதூகல திறப்புவிழா



ஏசியா என்ரர் பிறைஸ்

காலம்: 06-07-1979 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-02 மணி முதல் 12-48 வரையுள்ள சுபமுகூர்த்தவேளை.

புதிய நிறுவனத்தை கௌரவ நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் திறந்துவைப்பார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

ஏசியா என்ரர் பிறைஸ்

25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

தலைமையகம்: ஏசியா என்ரர் பிறைஸ் 129, 5ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

2937

## கூட்டணி எம்.பி.க்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

அனுராதபுரம், வவுனியா மாவட்ட எல்லைகளை மீண்டும் நிர்ணயிப்பது சம்பந்தமாக நேற்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து. தமிழர் விடுதலைக்கூட்டணி எம் பிக்கள் பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்பு செய்தனர்! (இத்தீர்மானவிபரம் கடைசிப் பக்கத்தில் வெளியாகியுள்ளது)

இத்தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம், 'ஜனநாயக விரோதமானமுறையிலும், நீதியற்ற விதத்திலும் கொண்டுவரப்படும் இத்தீர்மானத்தை தமிழினத்தின் சார்பிலும், எமது கட்சியின் சார்பிலும் கடுமையாக எதிர்க்கின்றேம் ஒரு சம்பிரதாயமுறைப்படியாகுதல் இப்பிரேரணைபற்றி எமது கருத்தை அறியாமல், சபையில் நிறைவேற்ற முயல்வதால். இச்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஜே சி. இனத்தைச்சேர்ந்த மாடு விற்பனைக்குண்டு ஒரு நாளைக்கு 10 போத்தல் பால் தரக்கூடியது விபரங்கட்கு! திருமதி ச. தியாகராசா, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். 2928

தேனீர்சாலைக்கு தேவையான ஷோகேஸ், மின்சார பொயிலர் மற்றும் தளபாடங்கள் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு. 9, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம் 2938

E Y மொறிஸ் மைனர் 4 கதவு தினசரி 2 மணிக்குப் பின் பார்வையிடலாம், 754, ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரேசனடி) யாழ்ப்பாணம். 2942

### தேவை

பெண்களுக்கான உடுப்புகள் வெட்டித்தைக்கக்கூடிய திறமை வாய்ந்த பெண்தொழிலாளர் தேவை. நேரடித் தொடர்பு கொள்க. மிஸ்கின்ஸ், இல 22/1, பெரிய கடை, யாழ்ப்பாணம். 2932

இரண்டு கோஸ்பவரில் அல்லது ஐந்து கோஸ்பவரில் ஐஸ் பழம் அடிக்கும் யந்திரம் டிபிறீஸ்டர் குளிர்சாதனப் பெட்டி இரண்டு சிலிண்டர் லேட் மிசின் தேவை. மு. ஏகாம்பரம், 92, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2936

### பயிற்சி

விசேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி 11/B, மொலிசாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2929

### ஏலவிற்பனை

த. பெ. ஆண்டியாபிள்ளை அவர்களிடம் 3-1-72 முதல் 29-8-73 வரையிலும் A S M PR. RM. Firm கடையில் 20-3-74 முதல் 27-2-78 வரையிலும், கொழும்பு டென்ஸ் ரோட் 222-ம் நம்பர் கடையில் அடவு வைத்து மீளாத நகைகள் யாவும் 1979 ஜூலை மாதம் 19-ம் திகதி மாலை 2 மணிக்கு மேற்படி கடையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.
· N M A C அப்துல் ஹமீத் அன்சன்
2910 ஏலதாரர்.

### விற்பனைக்கு

பேஜோ 404 டீசல் 1973 மொடல் விற்பனைக்குண்டு சி. சிவசுப்பிரமணியம், சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். 2934

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### பருத்தித்துறை பகிரங்க ஏலவிற்பனை (வெற்றுச்சாக்கு)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த வர்த்தக களஞ்சியத்திலிருக்கும் சுமார் 5,000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 14-7-79 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்

ஏலக்கூற்றில் வெற்றி பெறுவோர் ஏலக்கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லவேண்டும்.

பொது முகாமையாளர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
30-6-79. 2940

### வெற்றுச்சாக்கு விற்பனைக்கான
### கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனைக்கு உள்ள பலதரப்பட்ட வெற்றுச்சாக்குகளையும் விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு விற்பனை" என எழுதப்பட்டு 10-7-79 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்

வைப்புப் பணம் ரூபா 100/- கட்டி விண்ணப்பப்பத்திரங்களைச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்
தலைவர்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்,
2-7-79. 2941

# "அரசியல்பழிவாங்கல்
# தொழிற்சங்க நடவடிக்கைக்குமுன் வேலைநீக்கத்தை வாபஸ்பெறுக"

## ஈழவேந்தன் விவகாரம் குறித்து தொழிற்சங்க கூட்டணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத்தலைவர் திரு ம. க. கனகேந்திரன் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பதை தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

திரு. கனகேந்திரனின் தற்காலிக வேலைநீக்கத்தை உடன் வாபஸ்பெறுமாறும், மத்திய வங்கி ஆளுநரை, தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி கேட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழ் தொழிற்சங்க கூட்டணி செயலாளர் நாயகம் திரு ஐ. சோ. மூர்த்தி மத்திய வங்கி ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாவது!

சட்டரீதியாக வழங்கப்பட்ட அரசியல் உரிமையை ஒரு ஊழியரிடமிருந்து பறிப்பது தொழிலாளர்களின் அடிப்படை உரிமையை மீறுவதாகும்.

வினைத்துறை இந்துமர்நாட்டிற்கு இலங்கைக் கோஷ்டிக்கு தலைமை தாங்கிச் சென்றிருந்த திரு. கனகேந்திரன் இலங்கை இந்துக்களுக்கு ஏற்பட்டிருந்த அநீதியை எடுத்துக் கூறுவதற்கு சகல உரிமைகளும் இருந்தது,

மத்திய வங்கிகளின் கொள்கைக்கு எதிராக எதுவும் பேசவில்லை. அரசியல் பழிவாங்குவதற்கு சில பத்திரிகைகள் சோடித்த கருத்துக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தற்காலிக வேலைநீக்கம் செய்திருப்பது இந்நாட்டில் வாழும் இரு சமூகத்தவர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகளை வளர்ப்பதற்கு வழிவகுப்பதாகும்.

திரு. கனகேந்திரன் ஈழவேந்தன் இந்தியாவில் பேசிய பேச்சை ஒரு சாட்டாகவைத்து மேற்கொண்ட நடவடிக்கை ஓர் அரசியல் பழிவாங்கலாகும்.

32,000 க்கு மேற்பட்ட ஊழியர்களை உள்ளடக்கிய 22 தொழிற்சங்கங்கள் இணைந்துள்ள தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பாக தற்காலிக வேலைநீக்கத்தை வாபஸ் வாங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஈ-இ)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மின்தறி நிலையம் மூடப்பட்டது

(நாயன்மார்கட்டு)

அரியாலையிலுள்ள யாழ் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறி நிலையம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. இந்த மின்தறி நிலையத்துக்கு வேண்டிய நூல் கிடைக்காமையால் இந்த நிலையம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## திருவடிநிலை சிரமதானம்

(சுழிபுரம்)

சுழிபுரம் குகன் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. இ. சதாசிவம் தலைமையில் திருவடிநிலை தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களும், சங்க அங்கத்தவர்களும் ஒன்று சேர்ந்து திருவடிநிலை தீர்த்தஸ் தலத்தை சிரமதான மூலம் செப்பனிட்டனர். பருளாய் விநாயகர் தீர்த்த வைபவத்தை யொட்டி இப்பணி நடைபெற்றது ஆசிரியர் திரு. மு. சுப்பிரமணியம் சிரமதானத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றி உரையாற்றினர். (ஈ)


### முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றிய
S. சண்முகலிங்கம், S. K. கனகராசா
ஆகிய இருவரும் வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையால்
அவர்களுடன் செய்துகொள்ளும் எந்தவித கொடுக்கல் வாங்கலுக்கும்
நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதை
இத்தால் சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

V. தியாகராஜா,
உரிமையாளர்,
பெஸ்ரோன் விளம்பர சேவை,
பஸ் நிலையம், (2943) யாழ்ப்பாணம்.

### கேம்பிறிட்ஜ் கல்வி நிலையம்

44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

க. பொ. த. (உயர்தரம்)
பகல்நேர வகுப்புகள்
நடைபெறுகின்றன.

தூயகணிதம் பிரயோக கணிதம்
A. பத்மநாதன்

தாவரவியல், விலங்கியல்,
இரசாயனம், பௌதிகம்
விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்

ஆரம்பம் 2-7-79

2926 விபரங்கட்கு: நிர்வாகி.


### திருமணம்

மணமகன்: திருவளர் செல்வன்
அ. தற்பரானந்தன்
(அதிபர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)

மணமகள்: திருவளர் செல்வி
நகுலாம்பிகாதேவி
(ஆசிரியை, கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை)

இடம்: கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்

காலம்: 6-7-79 வெள்ளிக்கிழமை இரவு 9-15 முதல் 10-15 வரையுள்ள சுபவேளை

வரவேற்பு: 7-7-79 சனிக்கிழமை பி. ப. 4 மணி-7 மணி (மணமகன் இல்லம்)
8-7-79 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணி - 7 மணி (மணமகள் இல்லம்)

உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சி. மு. அப்புத்துரையும் (இளைப்பாறிய இந்துபோட் கணக்காளர்) பாரியாரும் கந்தரோடை சுன்னாகம்

சோ. கனகசபை
சோ. தில்லை நடராசா
அ. பொன்னம்பலமும் பாரியாரும்
கீரிமலை காங்கேசன்துறை.

2944


# "எலெக்ரோனிக்" கைக் கடிகாரத்தின்

எவறெடி பற்றரிகளுக்கு
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

## நியூ விக்ரேஸ்

றேடியோ திருத்துபவர்களின் கவனத்திற்கு

"I. C. Transistor" விற்பனைக்கு
கீழ்காணும் நம்பர்கள் கைவசம் உண்டு

| | | | |
|---|---|---|---|
| C 634 A | A 678 | UPC 563 H | HA 1329 |
| C 673 | A 683 | UPC 566 H | HA 1361 |
| C 828 | A 699 | B 545 A | LA 4112 |
| C 1013 | A 706 | BC 307 | SC 490 |
| C 1060 | A 733 | BC 547 | SG 104 |
| C 1061 | A 836 | BC 548 D | 2 SA 679 |
| C 1213 | A 3122 | BD 136 | 2 SA 793 |
| C 1226 | A 3155 | BF 194 | TBA 8105 H |
| C 1312 | A 4032 | BF 195 D | TCS 760 |
| C 1383 | 4031 P | BF 495 | AN 7115 |
| C 1466 | 4032 P | EBC 147 A | MAC—11—1 |
| C 1568 | M 5115 P | EBF 195 C | |
| C 1628 | TA 7205 P | ECG 159 | LED |
| A 490 | TA 7208 P | ED 1402 | 1096 |
| A 634 | D 187 | ED 1702 | 9450 |
| A 671 | UPC 41 C | HA 1314 | 1001012 |

# நாவலர் நூற்றாண்டுவிழா ஜூலை முதல் டிசம்பர்வரை

## 100 இடங்களில் கொண்டாட்டம்

தமிழினத்தின் கலாச்சாரக் காவலராகவும், சைவமசய மறுமலர்ச்சியாளராகவும், இலங்கை மணித்திருநாட்டின் அரசியல் விடுதலைக்கு வித்திட்ட மூலவருமாகப் போற்றப்படும் நாவலர் பெருமானின் நினைவு நூற்றாண்டை மிகச்சிறந்தமுறையில் கொண்டாடுவதென நாவலர் சபை தீர்மானித்துள்ளது.

பரந்த அடிப்படையில் நாவலர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான திட்டங்களும் நிகழ்ச்சிகளும் நாவலர் சபையின் தலைவரும் முன்னைநாள் நீதியரசருமான திரு வி சிவசுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளன.

விழாவின் முக்கிய அம்சங்களாக நாடெங்கும் 100 இடங்களில் நாவலர் விழாக்கள், நூல்வெளியீடுகள், நூற்றாண்டு மலர் வெளியீடு, நூற்கண்காட்சி, அனைத்திலங்கை அடிப்படையிலான கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, நாவலர் திருவுவப்பட ஊர்வலம் நாவலர் வரலாற்றைச் சித்தரிக்கும் இசைநாட்டியம், நாடகம், வில்லுப்பாட்டு முதலிய கலைநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் தமிழகத்திலிருந்து பேச்சாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூற்றாண்டு விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளும் இம்மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை நடைபெற இருக்கின்றன. இதற்கென சபையின் ஆட்சிக்குழு நியமித்துள்ள பல்வேறு உபகுழுக்கள் நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றன. சபை வகுத்துள்ள திட்டங்களின் அடிப்படையில் இம்மாதம் 28-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நூற்றாண்டு ஆங்குரார்ப்பண விழா ஆகஸ்ட் 18 இல் யாழ்ப்பாணத்தில் நூற்றாண்டுப் பிரசாரவிழா, செப்டம்பர் மாதத்தில் கட்டுரைப் போட்டி, சிறப்பிதழ் வெளியீடு நாவலர் பற்றிய பிரசுரங்களின் வெளியீடு ஆகியவையும் அக்டோபர் மாதத்தில் மாணவர் பேச்சுப்போட்டி, நவம்பர் மாதத்தில் நாடெங்கும் 00 இடங்களில் நாவலர் விழாக்கள், டிசம்பர் 1ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நாவலர் தேசியப் பெருவிழா, டிசம்பர் 4, 5, 6 திகதிளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நாவலர் ஆய்வரங்கு, டிசம்பர் 7ம் நூற்றாண்டு மங்களப் பெருவிழா ஆரம்பமாகி டிசம்பர் 10 ந் திகதிவரை நடைபெறும். நூற்கண்காட்சி, கவியரங்கம், சிறப்புரைகள், விவாத அரங்கு, பட்டிமன்றம், விழா ஊர்வலம், பரிசளிப்புவிழா குருபூசைப் பெருவிழா என்பன இடம் பெறவுள்ளன.

நாவலர் நூற்றாண்டுவிழாக் காரிப்பு வேலைகளைத் துரிதப் படுத்துவதற்காக கல்விமான்கள், பெரியார்கள், நாவலர் அன்பர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டங்கள் இம்மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலிலும் இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் நாவலர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. [கு]

## "கரந்தன் மக்களுக்கு இப்பாடசாலை ஒரு வரப்பிரசாதம்"

[நீர்வேலி]

கரந்தன்வாழ் மக்களுக்கு கரந்தன் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை ஒரு வரப்பிரசாதமாகும் என மேற்படி பாடசாலைக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தைத் திறந்துவைத்துப்பேசிய வடமாநிலக் கல்விப்பதிப்பதி திரு தி. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இப்பகுதி நீண்டகாலமாக ஒரு பாடசாலையின்றி மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருந்து வந்தது. இக்கஷ்டத்தை அறிந்த தேசியப் பேரவை உறுப்பினரும், கல்வி இலாகாவும் உதவி அரசாங்க அதிபர்களும் உற்சாகத்துடன் உழைத்ததன் பேரில் அமரர் பண்டிதர் இராமுப்பிள்ளையின் காணியில் இப் பாடசாலை நிறுவப்பட்டது என்றார்.

இப் பாடசாலை அமைவதற்கு காணி கொடுத்து உதவிய அமரர் பண்டிதர் இராமுப் பிள்ளையின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்த நீர்வேலிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. நடராசா பேசுகையில் பண்டிதர் இராமுப்பிள்ளை அமரராகி விட்டபோதும் அவரின் கொள்கைக்கு இணங்க இக்காணியைக் கொடுத்து உதவிய அவரின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நன்றி சொல்ல வேண்டியது எமது கடமை என்றார்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈ. ஈசுரபாதம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு வை. சொக்கலிங்கம், நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. இராசரத்தினம் பண்டிதர் நீ. கி. முருகேசு உட்பட பலர் பேசினர். [இ]

# மக்கள் கருத்து

## யாழ். குடாநாடு பாலைவனம் ஆகும் அபாயநிலை

யாழ்ப்பாணக் குடாநாடு கார்த்திகை, மார்கழி மாதங்களைத் தவிர்ந்த காலங்களில் வரட்சியால் மிகவும் பாதிக்கப்படுகின்றது. இதற்கு நிலநீர் இன்மையே காரணமாகும். குடாநாட்டிற்கு வான்பொழியும் மழையே நீர்தரும் கருவியாகும். ஆனால் குடாநாட்டில் மரங்கள் போதியஅளவு காணப்படாதது மழை பெய்யாமைக்கு ஒரு காரணமாகும்.

குடாநாட்டின் பெரும்பகுதி மரங்களற்ற மணல்தரையாகவே காணப்படுகிறது. இதற்குக்காரணம் எமது மக்கள் சுற்றாடல் பற்றி சற்றேனும் சிந்திப்பதில்லை, தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பதேயாகும்.

முக்கியமாக எமது குடாநாட்டில் சுற்றாடல் பற்றி நாம் சிந்திக்காமல் வேறுயாராவது செய்யட்டும் அல்லது அரசாங்கம் செய்யட்டும் என்று இருந்துவிட்டால் பிறசமூகத்தினர் எம்மை வருங்காலத்தைப் பற்றிச் சிந்தனையற்ற சீர்கேடடைந்த ஒரு சமுதாயமாகவே கருதுவர்.

நாம் இப்படியே கவனயீனமாகவே இருந்தோமானால் இருபது இருபத்தைந்து வருடங்களில் நம்தேசம் ஒரு பாலைவனப்பிரதேசமாக மாறக்கூடும். இதற்கு பொறுப்பாளிகள் நாமேயாவோம் அத்துடன் எமது சமுதாயமும், கலை கலாச்சாரம் எல்லாமே அழியக்கூடிய நிலை ஏற்படும். இதனைத் தடுப்பதற்கு பின்வரும் வழி வகைகளைப் பின்பற்றவேண்டும்;

எமது பிரதேசத்தில் மரம் நாட்டும் பணியினை ஊக்குவிக்க ஒரு சங்கமோ அல்லது குழுவோ அமைக்க வேண்டும்.

இதன் உபகுழுக்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப் பெறவேண்டும்.

இயல் இசை நாடகம் ஆகிய மூன்று கலைகளையும் பிரசாரப் பணியில் உபயோகிக்கவேண்டும்.

பின்வரும் மரஇனம் மிக எளிதில் வளர்க்கக் கூடியவையாகும் அவையாவன கருங்காலி, இபில் இபில், வேம்பு தென்னை, புளி, இயுகலிப்ட்ஸ் என்பனவாகும்.

தீவுப்பகுதிகளில் [உவர் நிலங்களில்] சவுக்கு மரத்தை மிக எளிதில் வளர்க்கலாம்.

ஐப்பசி, கார்த்திகை மழைகாலத்திற்கு முன் நாம் இம் முயற்சியில் இறங்க வேண்டும் அத்துடன் இதனை நாம் தொடர்ச்சியாக நடாத்தவேண்டும். எமது நிலையினை உணர்ந்து குடாநாட்டில் உள்ளவர்கள் யாவரும் விழித்தெழவேண்டும் இல்லையேல் நாம் நாடோடிகளாக இலங்கையின் அதன் மறு பாகங்களுக்கு இருப்பிடம் தேடி அலைய நேரிடும்.

எனவே இவற்றை எம் மனதில் கொண்டு எமது சூழலை அபிவிருத்தி செய்ய எமது பண்பாடுகளைக் காப்பாற்ற நாம் ஆவன செய்யவேண்டும்.

ப. நா.பகீதரன்
கொழும்பு—5

## மன்னாரில் கடும் வரட்சி

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக குளங்கள், குட்டைகள் எல்லாம் நீரின்றி வரண்ட பாலைவனம்போல் காட்சியளிக்கிறது.

குடிப்பதற்கு தற்போது வழங்கிவரும் குடிதண்ணீர் பாவனையாளருக்கு போதவில்லை என சொல்லப்படுகிறது. விடத்தல்தீவுக் கிராம மக்கள் தண்ணீருக்காக பல மைல் தூரம் நடந்து செல்லும் பரிதாபக் காட்சியை தினமும் காணக்கூடியதாக இருக்கிறது. [க]

## திருமலையில் பூர்ணி மாதினம்

[திருகோணமலை]

திருகோணமலை சிவானந்த தபோவனத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் வியாச பூர்ணிமா (குருபூர்ணிமா) தினத்தை முன்னிட்டு இம் மாதம் 7, 8, 9ம் திகதிகளில் யாக ஹோமாதிகள் இடம் பெறும்.

"ஆசிரியர்கள் - மாணவர்கள்

## நல்லுறவில் தான் கல்வி வளர்ச்சி தங்கியுள்ளது"

[நெல்லியடி]

"மாணவர்களின் வளர்ச்சி மாணவர்கள் பெற்றோர்கள ஆசிரியர்களுக்கிடையே நிலவும் நல்லுறவிலேதான் தங்கியுள்ளது. ஆதலால் மாணவர்களைப்பற்றி பெற்றோரும் ஆசிரியர்களும் நன்குணர்ந்து அவர்களுடன் நல்லுறவுடன் பழகி மாணவர்களின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்க வேண்டும்"

இவ்வாறு பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில பேசுகையில் கூறினார்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு நா துரைச்சாமி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பாடசாலை அதிபர் திரு எஸ் சிவபாதசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார்

திரு துரைரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடுசெய்யப்படும் பணம் அந்த ஆண்டிற்குள்ளேயே செலவிடப்படல் வேண்டும், இல்லையேல் அப் பணம் அடுத்தாண்டிற்கு பிரயோசனமற்றதாகப் போய் விடும். ஒவ்வொரு மாதமும் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களின் செலவினங்களை அறிக்கையாகத் தரும்படி கல்வியதிகாரியைக் கோரியுளளேன், பாடசாலைக் கட்டிடங்களுக்கு தேவையான பொருட்களைப் பெறமுடியாவிட்டால் உடனடியாக என்னுடன் தொடர்பு கொளளவும், மற்றும் தேவைகளையும் உடனுக்குடன் என்னிடம் தெரிவிக்கத் தயங்க வேண்டாம்

திருமதி துரைரத்தினம் பரிசில்களை வழங்கினார். உடுப்பிட்டி எம் பி திரு ஜ இராசலிங்கமும் உரையாற்றினர். [கு]

## "சாதியை அகற்றினால்தான் தமிழ் ஈழம் பெற முடியும்"

(சுழிபுரம்)

"சாதிக் கொடுமையை அகற்றினால்தான் தமிழ் ஈழம் பெற முடியும். இளைஞர்கள் எமக்குள் பாதியில் புகுந்த சாதியை சாகடிக்கும் பணியில் ஈடுபட்டு உழைக்கவேண்டும். எங்கள் மத்தியிலுள்ள சங்கங்களின் மூலம் சாதிக் கொடுமையை அகற்ற முடியும்"

இவ்வாறு பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தின் பதினாலாவது ஆண்டுவிழாவில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

பண்டிதர் ப. இராசகுரு தலைமையில் மன்றம் பணிமனையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், இந்திய மக்களிடம் இருந்த மூடப் பழக்கவழக்கங்களாகிய சாதிக் கொடுமை விதவைப் பெண்கள் உயிருடன் வாழவிடாமல் உடன் கட்டை ஏற்றுதல் போன்றவற்றை கண்டித்து நடவடிக்கை எடுத்த இராமசமிப்பெரியாரின் நினைவு நாளை இந்தியாவில் வருடா வருடம் கொண்டாடுவார்கள்

இன்று தமிழன் உலக நாடுகள் பலவற்றில வாழ்ந்தாலும் சொந்தமாக ஒரு நாடு இல்லை. வாழும் உரிமை உண்டு ஆளுகை ஆள்வதற்கு உரிமை இல்லை. இளைஞரின் கையில் தான் எமது இனத்தின் விடுதலை தங்கியிருக்கின்றது. ஆகவே எமது இளைஞர்கள் முதலில் சாதிக்கொடுமையை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. அப்பாத்துரை உட்பட மற்றும் பலர் பேசினர். (கு)

## கலைக்கோயில் அமரகலா போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

கலைக்கோயில் அமரகலா நாட்டியாலய மாணவிகளுக்கிடையே நடத்தப்பட்ட நடனப் போட்டியில் முதல் மூன்றிடங்களையும் பெற்ற மாணவிகளினது விபரம் வருமாறு;

**ஆரம்பபிரிவு:**
கி. கியாமளா, பூ. மணிவதனா, இ. நாகலதா, வி. சுகந்தி, ப. சுகர்ணலதா.

**முதலாம்பிரிவு:**
சு. பேபிசகிலா, அ. மஞ்சுளா. ந. நர்மதா.

**இரண்டாம்பிரிவு:**
ச. பூங்கோதை, இ. கீதா, தி. சுசீத்தா,

**மூன்றும்பிரிவு:**
ஸ்ரீ. சௌதிகா, அ. அருந்தவச்செல்வி, ச. மதிவதனி.

**நான்காம்பிரிவு:**
செ. ஜிட்னீஸ், ஸ்ரீ. பாலஜெனி,

**அப்பியாசப்போட்டி**

**ஆரம்பபிரிவு:**
கி. கியாமளா. பூ. மணிவதனா. வி. சுகந்தி, பொ. சிவனேஸ்வரி.

**முதலாம்பிரிவு:**
அ. மஞ்சுளா. ந. நர்மதா.

**இரண்டாம்பிரிவு;**
மு. றஜிதா, தி. சுசீத்தா, ந. ஜெயந்தா.

**மூன்றும்பிரிவு:**
அ. அருட்செல்வி, ப. பத்மினி, ஸ்ரீ. சௌதிகா.

**நான்காம்பிரிவு:**
ஸ்ரீ பாலஜெனி, செ ஜிட்னீஸ்.

## சைவ மகளிர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

சைவமகளிர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் மன்றத் தலைவி திருமதி தி. யோகநாதனின் இல்லத்தில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகசபை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் திருமதி இ. சண்முகலிங்கம், உபதலைவர்கள்: திருமதி தை கருணைநந்தன், திருமதி இ நாகராசா, இணைச் செயலாளர்கள்: திருமதி சோ சண்முகலிங்கம், செல்வி பா மயில்வாகனம், இணைத்தனாதிகாரிகள்: திருமதி ஈ வைத்திலிங்கம், செல்வி வ நாகலிங்கம்.

அகிலஉலக சிறுவர் ஆண்டைக் கொண்டாடுமுகமாக சில போட்டிகளைச் சிறுவர்கள் மத்தியில் நடாத்திப் பரிசில்கள் வழங்கவேண்டும் என்றும் இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## யாருடையது?

யாழ். ஆஸ்பத்திரி வீதி [கண்டி வீதிக்கு அண்மையில்] நாவலர் வீதியைச் சேர்ந்த ஒரு பெண்ணால் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுளது உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# பிரிட்டனில் வெளிநாட்டு மாணவரின் கல்விக்கட்டணம் அதிகரிப்பு

## 80-ம் ஆண்டு முதல் அமுல்; 85 ஆயிரம் மாணவர் பாதிப்புறுவர்

லண்டன், ஜூலை, 3

**பிரிட்டனில் உள்ள வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்விக் கட்டணங்கள் அடுத்தாண்டு முதல் அதிகரிக்கப்படவுள்ளன.**

காலபங்குமுதல் மூன்றில் ஒரு பங்கு வரை கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் பிரிட்டனிலுள்ள 85 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்கள் அடுத்த ஆண்டு முதல் தமது கல்விக்காக அதிக பணத்தைச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பட்டப் பின்படிப்புக்கான வருடாந்த கட்டணம் 925 பவுணிலிருந்து 1230 பவுணாக அதிகரிக்கப்படுகிறது.

பட்டப்படிப்புக்கான கட்டணம் 705 பவுணிலிருந்து 940 பவுணாக அதிகரிக்கப்படும்.

இவற்றுக்குக் குறைந்த தரமுள்ள முழுநேர கல்விக்கான கட்டணம் 390 பவுணிலிருந்து 520 பவுணாக அதிகரிக்கப்படும்.

இத் தகவலை பிரிட்டிஷ் பிரதி கல்விஅமைச்சர் நேற்றுத் தெரிவித்தார். (இ)

## 2,500 ரூபா லைசென்ஸ்

(கொழும்பு)

தொலைக்காட்சிப் பெட்டிகளை விற்பனை செய்யும் வியாபாரிகள் இனிமேல் வருடமொன்றுக்கு விற்பனை அனுமதிப்பத்திரப்பணமாக 2,500 ரூபா செலுத்தவேண்டும் இத் தகவலை ராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ளது.

## வேலை நிறுத்தம் செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இம்மாதம் 10-ந் திகதி வேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளனர்.

புதிய வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட 50 ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்குமாறும் இன்னும் சில கோரிக்கைகளையும் முன்வைத்தே ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (கு)

## முதலாவது விளையாட்டுப் போட்டி

(நீர்வேலி)

"நீர்வேலி சி. சி. த. க. பாடசாலையின் சரித்திரத்திலேயே முதலாவது விளையாட்டுப்போட்டி இன்று நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்படியாக ஆரம்ப பாடசாலையில் விளையாட்டுப்போட்டியை நடத்துவதன் மூலம் மாணவர்களிடையே நல்ல பழக்கவழக்கங்களையும், உற்சாகத்தையும் ஊட்டுவதாக அமைகின்றது" என மேற்படி விழாவிற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு பரிசில் வழங்கிய கோப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ஆ. தங்கராசா குறிப்பிட்டார்.

பாடசாலை தலைமைஆசிரியர் த. வேலுப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை மேற்படி பாடசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு ஆ சண்முகம் பாடசாலைக் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

போட்டியில் முதலாம்இடத்தைப் "பரா" இல்லமும் இரண்டாம் இடத்தை "இவா" இல்லமும், மூன்றும் இடத்தை ஜெயா இல்லமும் பெற்றுக்கொண்டன,

## இன்றைய பலன்

**ஆனிமாதம் 20-ம் திகதி**

(புதன்கிழமை)

(4-7-1979)

**மேடம்:** நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். சுகபோக நாள்,

**இடபம்:** சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலர் கடன்படவும் நேரிடலாம். தெய்வநம்பிக்கை நன்று.

**மிதுனம்:** கவர்ச்சிகரமான தினம், சிலவிடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள். உள்ளத்தில் இடம்பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அடக்கம் நன்று.

**கடகம்:** கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும். இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும். அரசினர் ஆதரவும் கிடைப்பதற்கு இடமுண்டு.

**சிங்கம்:** புதியவழிகள்மூலம் பொருள் வரவுக்குஇடமுண்டு. பெரியவர்களின் வாழ்த்துக் கிடைக்கும். எழுத்தாளர்களுக்கு புகழ் குவியும். பொதுவாக கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள், புதினத்திற்கு இடமுண்டு.

**கன்னி:** அற்பவிடயத்திற்கும் ஆத்திரமடைவீர். நெருங்கிய நண்பர்ஒருவரைப் பகைத்துக்கொள்ளநேரிடலாம் அடக்கம்வேண்டும்.

**துலாம்:** நாள் எல்லாம் அலைச்சல். உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தைப் பேணுக,

**விருச்சிகம்:** போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். நல்லதினம்.

**தனுசு:** சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பதுடன் தெய்வநம்பிக்கை நன்மை தரும்.

**மகரம்:** ஊதியம் வளரும் உற்சாகம் பெருகும், உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இனிமை சேர்க்கும் புதினமொன்று செவிகளில் வந்து மோதும்.

**கும்பம்:** காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம், நல்ல நாள்.

**மீனம்:** அன்னியர்கள் மத்தியில் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம், வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், சிலருக்கு நயன ரோகமும் தென்படும்,

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## மீண்டும் கப்பலில் பணியாற்ற விரும்பாத 5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் தற்கொலை!

(புலோலி)

கிரேக்கக் கப்பலில் பணியாற்றி வந்த ஒருவர் தாய்நாடாகிய இலங்கைக்கு வந்ததும் மீண்டும் தாம் பணியாற்றி வந்த கப்பலுக்குச் செல்ல விரும்பவில்லையாம். இதனால் நச்சுத்திராவகம் அருந்தி தனது உயிரைப் போக்கிக்கொண்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சபாரத்தினம் இராமநாதன் (வயது 40) ஐந்து பிள்ளைகளின் தந்தை இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார். இவரது மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம். வி. புவனேந்திரன் மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர்.

இறந்தவரின் மனைவி வசந்தாதேவி(வயது 34) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்த எனது கணவர் 22 மாதகாலமாக கிரீஸ் கப்பலில் பணிபுரிந்து வந்தார் எங்களுக்கு 5 பிள்ளைகள் இருக்கின்றனர். இறந்தவர் சுமார் இரண்டரை மாதங்களுக்கு முன் இவ்விடம் வந்தார். இவர் கடுமையாக மது அருந்தும் பழக்கமுடையவர். சில நாட்களாகக் கப்பலுக்குப் போவது பற்றி அடிக்கடி கூறிவந்தார். சம்பவ தினம் எங்கிருந்தோ வந்தவர் கடுமையாக வாந்தி எடுத்தார் இவர் குடிபோதையில் வழக்கமாக வாந்தி எடுப்பதனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை ஆனால் சற்று நேரத்தின்பின் அவர் மயக்கமடைந்தார். நான் அருகே சென்றபோது கிருமிநாசினி நாற்றம் வீசியது நான் குளறினேன். அயலவர்கள் ஓடிவந்தனர். ஆனால் அவர் இறந்துவிட்டார். இறந்த எனது கணவர் என்னுடன் மிகச் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தார். இவர் மீண்டும் கப்பலுக்குப் போகவிருப்பமில்லாதபடியால்தான் கிருமிநாசினி அருந்தியிருக்கலாமென நம்புகிறேன்" விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## படகுகளில் அதிக பிரயாணிகளை ஏற்றுதீர்

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுவரை சேவையிலீடுபடுத்தப்படும் படகுச்சேவையின்போது ஒவ்வொரு படகுகளிலும் குறிப்பிட்ட பிரயாணிகளையே ஏற்றிச்செல்லுமாறும் அதிகமாக ஏற்றிச்செல்லும் படகுகளின் பதிவு முடக்கச்செய்யப்படும் என்றும் வேலணை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (கு)



கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

3-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

சாந்தி யாழ். நகர் - போன் 7642
10-30, 2-30, 6-30, 9-45.
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்திப் பட வுலகின் முடிசூடா மன்னன், பழம் பெரு நடிகன் "இக்பர்" புகழ் திலிப் குமார்
இரட்டை வேடங்களில் தோன்றும்,
டஸ்தான்
இந்தி - கலர் - திடுக்கிடவைக்கும் மர்மங்கள் நிறைந்த உன்னத சித்திரம்
DILIPKUMAR - (Dual Role) SAIRABAANU
DUSTAN Hindi Color
Suspense And Thrill
Music: R. D. BURMAN

(குறிப்பிடப்பட்ட சில தினங்கள் மட்டும்)
மனோகரா (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி
கருணாநிதியின்
பணம்
(புதிய பிரதி)
(இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப் படுவதால்அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்)

81வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒ ளி வி ள க் கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

கடைசி 3 தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - தேவிகா கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
(புதிய பிரதி)

சில தினங்கள் மட்டும்
வின்சர் [யாழ்ப்பாணம்] போன்: 400
தினசரி 4 காட்சிகள்
10-30 2 00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔ வை யா ர்

லிடோ (யாழ். நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
இரு தினங்கள் மட்டும்
சி யா ம ளா


(மட்டுநகர்)
மட்டக்களப்பிலிருந்து மன்னார், வவனியா மாவட்டங்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் செயலாளராகக் கடந்த எட்டு வருடங்களாகச் செயல் புரிந்து வருபவரும் பத்து ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவசமய பாட வகுப்பை நடத்திக் கொண்டு வருபவருமான ஆசிரியர் திரு. வி. த. குமாரசாமி மட்டக்களப்பிலிருந்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமன்னார் பியர் றோ. க. வித்தியாலயத்துக்குத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை யிட்டும்—

# இந்துசமய ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

சங்கத்தின் திருமுறை ஆசிரியராகச் சேவை செய்துவந்த சங்கீத பூஷணம் திரு. இ. முருகப்பா வவனியா மாவட்டத்துக்கு உடனடி இட மாற்றம் செய்யப்பட்டதையிட்டும் எமது சங்கம் மிகுந்த துக்கம் அடைந்துள்ளதுடன் ஆட்சேபணையும் தெரிவிக்ளது.

இந்து சமயத்துக்கென ஒரு மந்திரி செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தில் எங்கள் சமயத்துக்குத் திட்டமிட்டு இழைக்கப்படும் அநீதி இதுவென்றே நாம் கருதுகிறோம்.

இரண்டு இந்து அமைச்சர்களைக் கொண்டுள்ள அரசாங்கத்தில் அதிலும் விசேடமாக இந்து சமயத்து விவகாரங்களுக்கென ஓர் அமைச்சை ஏற்படுத்தியுள்ள இந்த அரசாங்கத்தில் இந்து சமய ஆசிரியர்கள் பழிவாங்கல் மூலம் இடமாற்றம் செய்வதனால் பாதிப்படைபவர்கள் எமது சமயப் பிள்ளைகளே என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றுகூடி இதற்குத் தக்க பரிகாரம் காணவேண்டுமென எமது சங்கம் வேண்டுகின்றது. (இ)

# டிக்கட் இன்றி ரயில்பயணம்: அபராதம் அதிகரிப்பு!

(கொழும்பு)
புகையிரதங்களில் பயணச் சீட்டின்றி பிரயாணம் செய்யும் பிராணிகளிடமிருந்து பிரயாணத்துக்கான கட்டணம் இருமடங்கும் டணமும் அபராதத்தொகையாக நூறு ரூபாவும் அறவிடப்படும்.

இத்தகவலை புகையிரதப் பகுதி பொதுமுகாமையாளர் திரு எஸ் ஏ ஏ பீரிஸ் தெரிவித்துள்ளார். இத்திட்டம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அறவிடப்படும்.

முன்னர் புகையிரதங்களில் பயணச்சீட்டின்றிப் பிரயாணம் செய்தவர்களிடமிருந்து பிரயாணத்திற்கான கட்டண இருமடங்கும், அபராதத் தொகை 20 ரூபாவும் அறவிடப்பட்டுவந்தது. புதிய திட்டப்படி அபராதத்தொகை பின்வருமாறு அமையும்.

மூன்றும் வகுப்புப் பெட்டியில் பிரயாணச்சீட்டின்றி பிரயாணம்செய்யும் நபருக்கு பிரயாணத்திற்கான கட்டணத்தின் இருமடங்கும் நூறு ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணச் சீட்டின்றி பயணம்செய்யும் பிரயாணிக்கு பிரயாணத்தின் இருமடங்குக் கட்டணமும் 150 ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

முதலாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணச்சீட்டின்றி பிரயாணம் செய்பவருக்கு பிரயாணத்தின் இருமடங்குக் கட்டணமும் 200 ரூபா அபராதமும் விதிக்கப்படும். (செ)

# ஆரம்ப நீதிமன்ற திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற திறப்புவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது. (ஏ)

யாழ். சௌக்கியசேவை

# கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் இருபத்திரண்டாவதுவருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்தவாரம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம அமைப்பாளர்களாக யாழ் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம், வைத்திய அதிபர் வி பி அமரசிங்கம், கூட்டுறவுப் பிரதம பரிசோதகர் திரு போல் சண்முகம், தேசிய கூட்டுறவு சபை செயலாளர் திரு க கணேசலிங்கம், மக்கள் வங்கிப் பிரதிநிதி திரு எம் கே தேவரட்னம் ஆகியோர் சமூகம் கொடுத்திருந்தனர். அன்று நடந்த கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகசபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: பொ தேவராசா; உபதலைவர்: க செல்வராஜா, தனாதிகாரி: ச பாலசுப்பிரமணியம், உபதனாதிகாரி: க கிருஷ்ணராஜா, காரியதரிசி: சி செல்லத்துரை, நிர்வாக உறுப்பினர்: வை சிவலிங்கம், ச சத்தியமூர்த்தி. அ பி சந்தியாப்பிள்ளை, வை வே கந்தசாமி, சி சண்முகதாஸ். க ஞானப்பிரகாசம், செல்வி வ தெய்வநாயகி. (செ)


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 4-45, 7-00 & 9-45
சனி, ஞாயிறு 2-30
DOMINO PRINCIPLE

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
பட்டி விக்கிரமாதித்தன்

ஜனத்திரள் நிறைந்த 3வது வாரம்
Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.


# மீன்பிடி வள்ளம் கடலில் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கோவளத்துக்கு அண்மையில் மீன்பிடிக்கச் சென்ற சீ-நோர் நிறுவனத்திற்குச் சொந்தமான "ஸ்வெயில்" என்ற மீன்பிடி வள்ளம், பாறை ஒன்றுடன் மோதி பலத்த சேதத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியது,

கடந்த வியாழனன்று மாலை மீன்பிடிக்கச் சென்ற இவ்வள்ளம் கோவளம் கடற்கரையில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இயந்திரத்தில் டீசல் அடைப்பு ஏற்பட்டு, நடுக்கடலில், நங்கூரமிட்டிருந்ததாகவும், திடீரென வீசிய சூறைகளியால், பாறையுடன் மோதி வெடிப்புக்குள்ளாகி நீரில் மூழ்கியதாகவும் விபத்துக்கான காரணம் கூறப்பட்டுள்ளது.

வள்ளத்திலிருந்த தொழிலாளர்கள் தெய்வாதீனமாக கரைசேர்ந்துவிட்டனர். ஐந்து லட்ச ரூபா பெறுமதியுள்ள இவ் வள்ளத்தில் 'வயர்லஸ்' எக்கோ சவுண்ட், கொம்பாஸ் கருவிகள் மீட்கப்பட்டுள்ளன. பல லட்ச ரூபா பெறுமதியான வலைகள், குளிர்சாதனப்பெட்டி ஆகியன மூழ்கிவிட்டதாக படகோட்டி ஜோர்ஜ் அருள் எமது நிருபரிடம் தெரிவித்தார். (மன். நி)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள்

(ஊரெழு)
ஊரெழு கணேச வித்தியாசாலையின் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் சங்கத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-திரு. ச. கதிரவேலு, துணைத் தலைவர்கள்- திரு. த. தம்பிராசா, திரு. ந. துரைராசா, திரு. இ கிருஷ்ணபிள்ளை செயலாளர் திரு. மு. சம்பரப்பிள்ளை பிரதி செயலாளர் திரு க. பஞ்சலிங்கம், பொருளாளர்- திரு சு. செல்லப்பா, கணக்குப் பரிசோதகர்- திரு நா. இராசநாயகம்,

செயற்குழு உறுப்பினர்கள்- திருவாளர்கள் மு. வீரசிங்கம், அ. கனகசூரியர், சீ சிவநேசன், இ பொன்னுத்துரை, க. சின்னத்தம்பி, க. வசந்த குமார், திருமதி ம தம்பித்துரை, திருமதி ம கந்தசாமி.

0 0 0

## நாகேஸ்வரி வித்தியாசாலை

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், பாடசாலை அதிபர் திரு க. செல்லையா தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் சங்கத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. க. செல்லையா, உபதலைவர்- திரு. ம. முத்துத்தம்பி, செயலாளர்- திரு ஏ. செல்லத்துரை, பொருளாளர்- திருமதி செ. நடேசர். கணக்குப் பரிசோதகர்- திரு. ச. கயிலைநாதன். (ஈ)

## சுருவில் ஐயனார் தேர்

(ஊர்காவற்றுறை)
சுருவில் ஐயனார் கோவில் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது தாவடியூர் பண்ணிசைச் செல்வன் திரு. எஸ். ஆர் திருஞானசம்பந்தனின் பண்ணிசைக்கச்சேரியும் தேர்த்திருவிழாவில் இடம் பெறும். (கு)

# வவனியா மாவட்டத்துடன் 3 சிங்களப் பிரிவுகள் இணைப்பு

(கொழும்பு)

வவனியா நிர்வாக மாவட்டத்துடன், அனுராதபுர மாவட்டத்தின் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ப்பதற்கான தீர்மானம் நேற்று வெளியான பாராளுமன்ற கோவைப் புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இத்தீர்மானம் நிர்வாக மாவட்டச் சட்டத்தின்கீழ் இன்றிலிருந்து அமுலுக்குவரும்.

இதுவரை நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வவனியா நிர்வாக மாவட்ட எல்லைக்குள் இருந்து வந்தது. தற்போதைய புதிய திட்டத்தின்படி 7 பிரிவுகள் இருக்கும் | முன்னர். வவனியா தெற்கு (தமிழ்), வவனியா தெற்கு (சிங்களம்), வவனியா வடக்கு, வெங்கல செட்டிகுளம் என்ற பிரிவுகளே இருந்தன. இன்றிலிருந்து புதிதாக கடவத்கோறளை, குஞ்சுட்டு கோறளை, பதவியா ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்க்கப்பட்டுள்ளன. இதுவரை மூன்று தமிழ்ப் பிரிவுகளும் ஒரு சிங்களப் பிரிவும் இருந்து வந்தது. புதிய மாற்றத்தின்படி நான்கு சிங்களப் பிரிவுகளும் மூன்று தமிழ்ப் பிரிவுகளும் வவனியா மாவட்ட நிர்வாகத்திலிருக்கும்.

புதிதாக சேரும் அரசாங்க அதிபர் பிரிவுகள் அடங்கிய வவனியா மாவட்ட அதிகாரப் பிரதேசத்தின் எல்லைகள் வருமாறு:

வடக்கு-மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கும் புதுக்குடியிருப்பும் கடற்கரையோரப்பற்றுமாகும்.

கிழக்கு-முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பும் கடற்கரையோரப்பற்று, கடகு, திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளம் பற்று மேற்கு, அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவப்பொத்தானையும், மத்திய குளுரைம் பாலமுமாகும்.

தெற்கு-அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவப் பொத்தானை, மத்திய குளுப் பாலத்தை, கெத்தாகோறளை, அவரகம் பாலத்தை கிழக்கு மேற்கு.

மேற்கு- முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு, மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கும். நாகுட்டாணும், அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள தவரகம் பாலம் மேற்கு ஆகும்.

புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வவனியாவுடன் இணைக்கும், தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிபலமாக எதிர்க்குமெனத் தெரிகின்றது. (கே-கு)

## மடுமாதா திருநாள்: அதிகமான பக்தர்கள்

[மன்னார்]

மடுமாதா வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் சுற்றுப் பிரகாரத்துடன் நிறைவுற்றது.

வழமையைவிட இம்முறை பக்தர்கள் அதிகமாகவே காணப்பட்டனர். வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் அன்றையதினம் அதிக பஸ்களை சேவையிலீடுபத்தியதால் பக்தர்கள் சிரமமின்றிப் பிரயாணம் செய்யக் கூடியதாகவிருந்தது.

பஸ் போக்குவரத்துக்கான ஒழுங்குகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தென்பகுதிப் பிரதேசமுகாமையாளர் திரு என். தியாகராசா கவனித்துவந்தார் அவரது நேரடிக் கண்காணிப்பிலும் ஊழியர்களின் ஒத்துழைப்பாலும் பஸ்சேவை ஒழுங்காக நடைபெற்றது. [கு]

## பஸ் விபத்து: 50 பேர் பலி! 100 பேர் காயம்

[புதுடில்லி]

எதிர் எதிராக வந்துகொண்டிருந்த இரண்டு பஸ்கள் மோதிக் கொண்டதில். ஐம்பது பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர்!

நூறுபேர் காயமுற்றனர்.

இத்துயருட்டும் சம்பவம், பிஹாரில் கஜாவகிபூர் இராமம் அருகே நேற்று நிகழ்ந்தது

மாண்டவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## இன்ஸ்பெக்டர் குருசாமியின் இறுதி அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

இன்ஸ்பெக்டர் குருசாமியின் இறுதி ஊர்வலத்தில், 150 பொலிஸார் அணிவகுத்துசெல்ல, பொலிஸ், இராணுவ விமானப்படை உயர் அதிகாரிகளும், பெண்கள் உட்பட பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

நேற்று காலை ஒட்டுமடத்திலுள்ள அவரது இல்லத்தில், இறுதி அஞ்சலியும். சமய முறைப்படி கிரிகைகள் நடைபெற்று காலை 10 மணிக்கு இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

வீட்டிலிருந்து ஒட்டுமடசந்திவரை சமய முறைப்படி, பக்திப்பாடல்களுடன் ஊர்வலம் சென்றது. அதன்பின் மயானம்வரை பொலிஸாரின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் சென்றது.

மயானத்தில், பொலிஸ் உயர் அதிகாரிகள் பெட்டியை தூக்கி வந்து சிதையில் வைத்தனர். மலர் வளையங்கள் சாத்தப்பட்டன. பூதவுடல் பொலிஸ் கொடியால் போர்த்தப்பட்டிருந்தது முப்படை அதிகாரிகளும், இறுதி அஞ்சலி செலுத்தியபின், 42 தடவை மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டபின், அவரது சகோதரரான இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிதைக்கு தீமூட்டினார். மயானத்திற்கு பெண்களும் சிறுவர்களும் வந்திருந்தனர்.

மயானத்தில் நடந்த அஞ்சலி உரையின் போது, எஸ் எஸ் இரத்தினம், அமரர் குருசாமி கடந்த 25 ஆண்டு காலமாக சேவையாற்றிய இடங்களிலெல்லாம், அதிகாரிகளினதும், பொது மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார் என்று கூறினார்.

அமரர் குருசாமி மறைவு குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் அரைக் கம்பத்தில் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது [கொ]

## சன்சோனி கமிஷன்:

# குமாரசூரியரை கொலைசெய்ய திட்டமிடப்பட்டது

(கண்டி)

"முன்னாள் தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரைக் கொலைசெய்யவும், வேறு பல பலாத்கார சம்பவங்களிலும் ஈடுபட்டிருந்த 30க்கும் மேற்பட்ட இளைஞர்களில் சத்தியசீலன் என்பவரும் ஒருவர். இவர் இப்பொழுது லண்டனில் இருக்கிறார். தமிழீழமே இவர்களது குறிக்கோளாகவிருந்தது'

இவ்வாறு கண்டியில் நடைபெறும் சன்சோனி கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த யாழ்ப்பாண முன்னைநாள் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜே எம். டி. ஆரியசிங்கா குறிப்பிட்டார்.

திரு. ஆரியசிங்கா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

"சத்தியசீலன் வெடிக்குண்டுகளை தயாரிக்க தேவைப்படும் பொருட்களை தான் வாங்கியதாகவும் பின்னர் அப்பணத்தை தான் மாவை சேனாதிராஜாவிடம் பெற்றுக் கொண்டதாகவும் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார் தான் யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகராக பதவியேற்று 15 தினங்களுக்குள் வேலணையில் உபதபால் நிலையமொன்றை திறக்கச் சென்ற முன்னாள் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியரைக் கொலை செய்ய திட்டமிட்டிருந்ததைக் கண்டுபிடித்தேன். திரு. குமாரசூரியர் பிரயாணம் செய்த வாகனம் மதகொன்றின் மீது செல்கையில் மதகையும், வாகனத்தையும் "டைனமட்'டுக்கள் மூலம் சேதப்படுத்த இளைஞர்கள் திட்டமிட்டிருந்தனர்.

திரு. குமாரசூரியர் வேலணைக்கு சென்ற சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் திரு. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் உட்படப்பல இளைஞர்கள் கறுப்புக் கொடிகளைப் பிடித்தவாறு "துரோகி போ" என்று கோஷமிட்டனர் திரு. குமாரசூரியரின் விஜயத்தின் போது ஆர்ப்பாட்டம் செய்த இரு இளைஞர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். இவ்விரு இளைஞர்களிடமும் 25 டைனமட்டுகள் காணப்பட்டன. அமைச்சர் பிரயாணம் செய்துவாகனம் செல்லும் மதகின்கீழ் பொருத்துவதற்காகவே 25 டைனமைட்டுக்களை வைத்திருந்ததாக இளைஞர்கள் பொலிசாருக்கு வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். இவ்வாக்குமூலத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட மதகொன்றின் கீழிருந்து டைனமைட்டுக்கள், கம்பித்துண்டு, பட்டாரிகள் ஆகியவற்றை பொலிசார் கைப்பற்றினர். இரு கம்பித்துண்டுகளை இணைப்பதின்மூலம் டைனமைட்டுக்களை வெடிக்கவைக்கவே இப்பொருட்களை மதகின் கீழ் வைக்கப்பட்டதாகவும் இளைஞர்கள் 'குறிப்பிட்டுள்ளனர்.

இந்தஇளைஞர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்யப் போதுமான சாட்சியங்கள் இருந்தன. எனக்குத் தெரிந்தவரை இவ்விளைஞர்கள் மீது இதுவரை எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

"விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் எவரும் எதிர்பாராத முறையில் திடீர் என்றுவிடுதலை செய்யப்பட்டனர் இவர்கள்மீது எதுவிதவழக்குகளும் தாக்கல்செய்யப்படவில்லை''.

இக்கமிஷன்முன் அரசாங்க தரப்பில் ஆஜராகும் சட்டத்தரணி திரு. பி. தென்னக்கோன் சாட்சியை வழிநடத்தினார். (கா)

### காணவில்லை

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த இன்னத்தம்பி சந்திரசேகரம் (காந்தி) கடந்த சனி முதல் காணவில்லை வயது 32. உயரம் 5' 6'' பொது நிறம். தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டுள்ளது. சிகப்பு கோடன் சாரமும் மஞ்சள் சேட்டும் உடையாக அணிந்திருந்தார். இவரைப்பற்றி தகவல் அறிந்தோர் அண்மையில் உள்ள பொலிஸ் ஸ்டேசனுக்கோ அல்லது சி லோகேஸ்வரன் கோராம்புலம் அச்சுவேலி என்ற விலாசத்துக்கோ அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2945

### நயினை உற்சவம் கடல் பாதுகாப்பு சேவை

[வேலணை]

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் திருவிழாக்காலத்தில் யாத்திரிகர்கள் கடலில் பிரயாணம் செய்கையில் ஏற்படும் ஆபத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக எதிர் வரும் வெள்ளிக்கிழமை முதல் கடற் பாதுகாப்புச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கடற்பாதுகாப்புச் சேவை 6-ம் திகதி தொடக்கம் பூங்காவனத்திருவிழாவரை இரவு பகலாக நடைபெறும். இச் சேவை அங்குரார்ப்பண விழாவில், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து, யாழ். கச்சேரி பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகசுந்தரம். ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம். ஐயாத்துரை, நயினாதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. தம்பாபிள்ளை, ஊர்காவற்றுறை நீதிபதி உட்பட நயினாதீவு வடக்கு, தெற்குக் கிராமசேவை அலுவலர்களும் கலந்துகொள்வார்கள்.

### பண்ணிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் பதினோராந் திருவிழாவான நாளை வியாழக்கிழமை மாலை தாவடியூர் பண்ணிசைச் செல்வன், எஸ். ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவார். [கு]

### கிராமசேவகர்களுக்கு நிரந்தர வீடுகள்

(வேலணை)

அரசாங்கம் நாட்டில்கடமை புரிந்துவரும் கிராமசேவையாளர்களுக்கு அந்தத்தப்பகுதியில் நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்கவிருக்கிறது. இதற்கான வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் பிரகாரம் முதல் கட்டத்தில் 4000 ஆயிரம் வீடுகளைச் கட்டிக்கொடுப்பதெனவும் இவற்றில் யாழ் மாவட்டத்தில் 150 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன.

### தமிழர் கூட்டணி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றன

உரைகளின் எதிரொலி

"இந்த அரசாங்கத்தைப் பற்றி திரு அமிர்தலிங்கம் வெளிநாடுகளில் தவறுகப் பேசியதால், இந்த நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய பல்வேறு உதவித் திட்டங்கள் கூட தடைப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்த நாட்டின் அபிவிருத்திக்கு நாசம் ஏற்படுத்தப்பட்டது.

தடைசெய்யக் கோருகின்றனர்

"தமிழீழ இயக்கத்தையும், தமிழர்விடுதலைக் கூட்டணியையும் தடைசெய்யுமாறு வடக்கு கிழக்கைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களும், சமயநிறுவனங்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் இந்தக் கோரிக்கைக்கிணங்கி, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அரசு தடைவிதிக்கநேரிடலாமென்று எச்சரிக்கை செய்கின்றேன். சட்டமும், ஒழுங்கும் எந்த விதத்திலும் நிலைநாட்டப்பட வேண்டும்.

"தனித்தமிழ்நாடு கோரிக்கைக்கு தமிழ், முஸ்லிம் மக்களிடையே போதுமான ஆதரவு இல்லை. பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிவினைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாணத்திலுள்ள பதின்மூன்று எம் பிக்களில் இருவர்மட்டுமே கூட்டணி எம் பிக்களாக இருக்கின்றனர். வடபகுதியிலும் கூட்டணிக்கு போதுமான ஆதரவு கிடையாது. நாடு பிளவுபடுவதை நாம் அனுமதிக்கமுடியாது.

"திரு அமிர்தலிங்கமும் மற்றும் கூட்டணி எம் பிக்களும் நிகழ்த்தும் பேச்சுக்கள், பயங்கரவாதத்தைத் தூண்டுவதாகவே அமைந்திருக்கின்றன. கூட்டணி எம் பிக்களின் அண்மைக்காலப்பேச்சுக்கள் வன்செயல்களையும், பலாத்காரத்தையும் தூண்டுவதாகவே உள்ளன.

"கூட்டணியின்நியாயமற்ற போக்கை நாட்டின் பெரும் பகுதி தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை. இவர்களதுநட்புறவை அரசாங்கம் எதிர்பார்க்கும் அதேநேரத்தில். ஐக்கியஇலங்கையை இந்த நாட்டில் கட்டி எழுப்பும் அரசின்நோக்கத்தை சமாதானம், நட்புறவு மூலம் பொறுமையுடன் அடைவோமென்று இந்த நாட்டுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்'' என்று ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன தமது உரையில் குறிப்பிட்டார்.

### கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையிலிருந்து வெளியேறுகின்றோம்'' என்று கூறி, சபையை விட்டுவெளியேறினார் திரு அமிர்தலிங்கத்தைத் தொடர்ந்து திரு எம் சிவசிதம்பரமும், திரு கே துரைரத்தினமும் வெளியேற மற்றையகூட்டணி எம் பிக்களும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். [ம]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோரியில் மேற்கு வீதி [illegible] இலக்க அச்சகத்தில் 979-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Recognized as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu [illegible] [illegible] 289.